Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -30 16-11-2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 271

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், படம் பிறேம் செய்தல் அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம்

யாழ் சாலை, கிளிநொச்சி. (சி-8689)

R.V. பந்தல்சேவை தர்மபுரம்.

# சனாதிபதியின் அதிகாரத்தில் திருத்தம் செய்ய மல்வத்தையிடம் உதவி கோருகிறார் ரணில்!

## கண்டியில் பீடாதிபதியைச் சந்தித்துப் பேச்சு

(கண்டி)

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையில் திருத்தங்களைக் கொண்டுவர முடியுமா? என்று சனாதிபதியுடன் கலந்தாலோசிக்குமாறு மல்வத்த பீடத்தைச் சேர்ந்த மகாநாயக்கரை சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டுள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பிற்பகல் மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்துள்ளார்.

அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஐ.தே.கட்சியின் தவிசாளர் மலிக்சமரவிக்கிரம ஆகியோரும் பிரதமருடன் சென்றிருந்தனர்.

இச்சந்திப்புக்களின் போது தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து பேசப்பட

(8ஆம் பக்கம் பார்க்க...)

## புலிகள்-விசேட அதிரடிப்படையினர் அம்பாறையில் சந்திப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்காவின் விசேட அதிரடிப் படையினருக்குமிடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இரு பகுதியினருக்குமிடையில் புரிந்துணர்வை வலுப்படுத்தும் வகையில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்று வந்த இந்தச் சந்திப்பு கடந்த புதன்கிழமை இடம்பெறவிருந்த போதிலும் தெற்கு அரசியல் நெருக்கடிநிலை காரணமாக விடுதலைப்புலிகளின் வேண்டுகோளின்படி காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டிருந்தது. நேற்று மீண்டும் இடம்பெற்றது.

(8ஆம்பக்கம் பார்க்க...)

## கண்டியில் பிரதமருடன் சனாதிபதி சந்திப்பு

# தேசிய நல்லிணக்க அரசு குறித்து சனாதிபதி மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

கண்டியில் சனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்து அரசியல் நிலைமை குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

பொ.ஐ.முன்னணியும், ஐ.தே. முன்னணியும் ஒன்றுபட்டால் ஒரு வருடத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று பிரதமருக்கு சனாதிபதி கூறியுள்ளார். இதைப் பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் சனாதிபதி கூறியுள்ளார்.

தேசியப் பிரச்சினையை இரு கட்சிகளும் ஒன்றுபட்டால் மாத்திரமே இணக்கத்திற்குக் கொண்டுவர முடியும். ஒரு கட்சி மட்டும் இந்த விடயத்தைக் கையாள்வதன் மூலம் தீர்வைக்காணமுடியாதுள்ளது. ஆகவே, ஒரு தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை

(8ஆம்பக்கம் பார்க்க...)

## அரசியல் நிலவரம் குறித்து மு.கா.உயர் பீடம் ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர் பீடம் நேற்றுகூடி தற்போதுள்ள அரசியல் நிலவரம் குறித்து ஆராய்ந்தது.

இனப்பிரச்சினைக்கு பொ.ஐ. முன்னணியும், ஐ.தே.முன்னணியும் இணைந்து ஒரு தீர்வைக்காண வேண்டும். இதுவரை எடுக்கப்பட்ட சில அணுகுமுறைகளை மறந்து சனநாயக முறையில் சனாதிபதியும் பிரதமரும் சேர்ந்து முக்கிய விடயங்களை முன்னெடுக்கவேண்டும். இருவரும் மீண்டும் சந்திக்கும் போது இது தொடர்பாக ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும். இந்த வழியில் முஸ்லிம் காங்கிரஸ் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது என்றும் இக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (32)

## நோர்வே அனுசரணையாளர்கள் மீது சிஹல உறுமய கண்டனம்

நோர்வே அனுசரணையாளரின் கூற்றுக்களுக்கு சிஹல உறுமய கண்டனம் தெரிவித்துள்ளது. அதன் தலைவர் திலக்கருணாரட்ண இது குறித்துத் தெரிவிக்கையில், சனாதிபதி பொறுப்பேற்றுக்கொண்ட மூன்று அமைச்சுப்பதவிகளை மீள ஒப்படைக்குமாறு நோர்வே அனுசரணையாளர்கள் கேட்டுள்ளனர்.

சனாதிபதி அரசியலமைப்பு ரீதியாக தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே மூன்று அமைச்சுகளையும் பொறுப்பேற்றுள்ளார். இந்நிலையில் அனுசரணையாளர்களின் கூற்றுக்கள் அப்பட்டமாக அரசியலமைப்பை மீறுகின்ற தன்மை என அவர் தெரிவித்தார்.

# சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க சனாதிபதி-பிரதமர் இணைந்து செயற்படவேண்டும்

## - அமெரிக்கா கோரிக்கை

(கொழும்பு)

சமாதான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு சிறிலங்கா சனாதிபதியும் பிரதமரும் ஒன்றிணைந்து செயற்படுமாறு அமெரிக்கா கோரியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நாளாந்தம் நடத்தும் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே பேச்சாளர் அடம் ஏர்ளி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சியை வெற்றியடையச் செய்வதற்கு சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க அமெரிக்கா தயாராக இருக்கிறது.

சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு கண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக மேலும் ஒத்துழைப்பை வழங்க நோர்வே அரசாங்கம் முன்வந்துள்ளது. விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு

(8ஆம்பக்கம் பார்க்க...)

## திட்டமிட்டபடி பாராளுமன்றம் புதன்கிழமை கூடும்

### - பாராளு. செயலாளர் நாயகம் அறிவிப்பு

திட்டமிட்டபடி சிறிலங்கா பாராளுமன்றம் எதிர்வரும் 19ஆம் திகதி கூடுமென பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நேற்று அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் மாலை 2.30 மணிக்கு நிதியமைச்சரால் 2004ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் இரண்டாவது சட்டத் தொடரின் முதலாவது அமர்வு அன்று காலை 10மணிக்கு ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சமாதானத்தை நிலைநாட்டும் வலுவை பொ.ஐ.மு. மட்டுமே கொண்டுள்ளது

## -- எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வலுவை பொதுசன ஐக்கிய முன்னணிமட்டுமே கொண்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும் போது மேலும் அவர் தெரிவிக்கையில், அனைத்து சமூகங்களும் அமைதியுடன் வாழ சமாதானம் நிலைநிறுத்தப்பட வேண்டும். இதனை நடைமுறைப்படுத்தும் வலு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமை தாங்கும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கே உண்டு.

சமாதானத்துக்கு பொதுசன ஐக்கிய முன்னணி எதிரானதல்ல. ஆனால் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் கேள்விக்கிடமானவை என்றார்.

## சுன்னாகத்தில் பொலிசாருக்கு கலகம் அடக்கும் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்திலுள்ள சிறிலங்காப் பொலிசாருக்குக் கலகம் அடக்கும் பயிற்சி கடந்த இரண்டு நாட்களாக வழங்கப்பட்டு வருகின்றது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமைபுரியும் இவர்களுக்கு அந்நிலையத்திலுள்ள பயிற்சி மைதானத்தில் வைத்து இப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இவர்களில் ஒரு குழு கலகம் செய்பவர்கள் போலவும், மற்றொரு குழு கலகம் அடக்குபவர்கள் போலவும் பாவனை செய்து பெரும் கூச்சலுடன் பொலிசார் இந்நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (33)

## மாவீரர் நாள் நவம்பர்-27

"ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல. அந்தச்சாவு ஒரு சரித்திர நிகழ்வு; ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை; அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை. அந்த இலட்சியநெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கின்றது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பி விடுகின்றது."

**தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.**

# பெண்கள் அ.பு.நிறுவனத்தால் 26 பயனாளிகளுக்கு கடன் வழங்கல்

ஐக்கிய அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் நடைமுறைப்படுத்தும் சிறு கைத்தொழில் சுய முயற்சிக் கடன் திட்டத்தில் உழைப்பாளரை இழந்த 26 பயனாளிகளுக்கு மேற்படி சுயமுயற்சிக்கடன் வழங்கப்பெற்றது.பெ. அ.பு. நிறுவன நிறை வேற்றுப் பிரதிப் பணிப்பாளர் கனகாம்பாள் தலைமையில் நேற்று பி.ப. 1.30 மணிக்கு மேற்படி நிறுவன மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, தையல் இயந்திரம் ஆகிய வற்றிக்கென உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கைச் சேர்ந்த உழைப் பாளிகளை இழந்த 26 பயனாளிகளுக்கு நிறுவனத்தினரால் காசோலைகள் வழங்கப்பெற்றன.நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் சுதர்சினி, பிரதிப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள்,கிளி.மாவட்ட இணைப்பாளர்வினோ ஆகியோர் மேற் படிதிட்டத்திற்கான காசோலைகளைப்பயனாளிகளுக்கு வழங்கினர். (சோ)




# சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் வீதியோர மரநடுகைத்திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த கால சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக வீதியோர மரங்கள் மற்றும் நகரை சூழவுள்ள நீண்ட கால பயன்தரு மரங்கள் அழிக்கப் பட்டு தேசத்தின் சூழல் பாதிக்கப்பட் டுள்ளது. இந் நிலைமையை கவ னத்திற் கொண்டு வனவளப் பாது காப்புப் பகுதி, கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இணைந்து மாவீரர் நாளையொட்டி தேசத்தில் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் வீதியோர மரநடுகைத் திட்டத்தினை அறிமுகம் செய்ய வுள்ளது.

மேற்படி திட்டமானது இரண் டாண்டுகளை மையமாக வைத்து கிளிநொச்சி மாவட்டத்தில் உதய நகர், கனகபுரம், செல்வாநகர் பிர தான வீதிவழியில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதுடன் இதன் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு கிளிநொச்சி டிப்போச் சந்தியில் நடைபெறவுள்ளது. இதில் அரச, அரச சார்பற்ற அமைப்புகளின் தங் கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வுள்ளனர். (சோ)


அந்தியேட்டிக் கிரியையும், சபிண்டீகரண அழைப்பிதழும், நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 08 - 07 - 1920

ஆண்டவன் அழைப்பில் 17 - 10 - 2003



கடந்த 17.10.2003 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி எய்திய எங்கள் குடும்பத்தலைவர்

அமரர் சரவணை - செல்லத்துரை

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கல்வீரான் குளத்தில் முன்னர் வசித்தவரும், நாவலர்வீதி முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர் இறைவனடி எய்திய செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், தொலைநகல் மூலமும் எமக்கு ஆறுதலளித்து, இறுதிக் கிரியைகளில் கலந்து உதவிய உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவிப்பதுடன்,அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் சுபானு வருடம் ஐப்பசி மாதம் 29ஆம் நாள் (15.11.2003) சனிக்கிழமை அன்று முல்லைக்கடலில் நடைபெற்று, சபிண்டிகரணம் ஐப்பசிமாதம் 30ஆம் நாள் (16.11.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் முள்ளியவளை இல்லத்தில் நடை பெறும், அத்தருணம்தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்

மகன்மார்

நாவலர்வீதி,
முள்ளியவளை.

செ.இராமலிங்கம்[இ.போ.ச.மன்னார்],
செ.துரைராசா[இ.போ.ச.வவுனியா],
செ.சபாநாதன் [வி.ரி.எஸ்.மன்ரி கேவிஸ் வவுனியா],
செ.தங்கராசா [பவற்றெய்ன்].

(சி-8715)


# புலிகளின்குரலின் 13ஆம் ஆண்டு நிறைவு கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

புலிகளின் குரல் 13 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட வானோசை 13 இன் கலை இலக் கியப் போட்டி முடிவுகள் அறிவிக் கப்பட்டுள்ளன.

இவர்களுக்குரிய சான்றிதழ்கள் 20.11.2003 (வியாழன்) அன்று மாலை 4.00 மணிக்கு கிளிநொச் சியில் அமைந்துள்ள புலிகளின் குரல் நடுவப்பணியகத்தில் நடை பெறவிருக்கும் வானோசை.13 நிகழ் வின்போது வழங்கப்படும்.கலை இலக்கியப்போட்டியில் தெரிவான ஆக்கங்கள் எழுதியவர்களை, அன்றைய நாள் நடைபெறவிருக் கும் வானோசை.13 நிகழ்வின்போது வருகைதந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும்படி புலிகளின் குரல் நிறுவனத்தினர் கேட்டுக்கொள் கின்றனர்.

**நாடகம்**

1 ஆம் இடம் "ஒரு சாவும் சில சிந்திப்புக்களும்" பிரஞ்ஞன், கரண வாய் மேற்கு, கரவெட்டி.

2 ஆம் இடம் "நல்லமனிதம்" கனக கர்ணஇந்து, செல்வி, தனுசஷியா மகேந்திரன், இல.54,5ஆம் பண்ணை கனகபுரம், கிளி நொச்சி.

3 ஆம் இடம் "வெளித்தெரியும் முகத்தின் மறுபக்கம்" க.சுசீதரன், இந்து இளைஞர் மன்றத்தடி, ஆவ ரங்கால் மேற்கு, புத்தூர், யாழ்ப் பாணம்.

**சிறுகதை**

1 ஆம் இடம் "பெண்ணொருத்தி வந்தாள்"போராளிஅன்பரசு, அனைத் துலகத் தொடர்பகம், தமிழீழ விடுத லைப்புலிகள், தமிழீழம்.

1 ஆம் இடம் "இரத்தம்" போராளி அ.காந்தா, மாலதி படையணி.

2 ஆம் இடம் "மாணிக்கங்கள்" வனிதா, மே.பா.திருமதி. இ.அரு ணாசலம்,94/1, ஜெயந்திநகர், கிளி நொச்சி.

3 ஆம் இடம்"இறுதிவரை" நகுலா ஆனந்தன், கொத்தன்தறை, பொலி கண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.

**கவிதை**

1 ஆம் இடம்"உயிரின் வரையில்" போராளி வி.ஜெயசீலன், மேற்கு கட்டளைப் பணியகம், தமிழீழம்.

2 ஆம் இடம் "உறவுக்கு ஒரு கடிதம்" போராளி அ.காந்தா, மாலதி படையணி.

3 ஆம் இடம் "சிந்திடும் இந்தக் குருதி சந்ததிக்கானது" போராளி சி.செம்பருதி, ராதா வான் காப்புப் படையணி, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்.

## கருத்தரங்கு

துணுக்காய்ப் பிரதேசத்தில் இதுவரையும் பிறப்பு இறப்புப் பதிவு களை மேற்கொள்ளாதவர்கள் பிறப்பு இறப்புப் பதிவுகளை நடமாடும் சேவை மூலம் பெற்றுக்கொள் வதற் கான கலந்துரையாடல், முல்லைத் தீவு மாவட்ட பிறப்பு இறப்புப் பதிவா ளர் நாயகம் அவர்களால் 12ஆம் திகதி காலை 11மணிக்கு துணுக் காய் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. பிரதேச செயலர் சி.இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அபிவிருத்தி உறுப்பினர்களும் மற் றும் பொது நிறுவனங்களின் பிரதி நிதிகளும் கலந்துகொண்டனர். இதில் பிறப்பு, இறப்புப் பதிவுகளை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு 2ஆம் கட்டமாக துணுக்காய்ப் பிரதே சத்தில் நடமாடும் சேவைகளை ஆரம்பிப்பதற்கான கருத்துக்கள் வழங்கப்பட்டன. (24)

# கிளி.யில் மாணவர்களுக்கான சூழல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் மாணவர் களுக்கான சூழல் விழிப்புணர்வு கடந்த 13ஆம்திகதியன்று நடை பெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட த.பொ.மே.நிறுவனப் பொறுப்பாளர். மு.செந்தில் தேசியக் கொடியினை ஏற்றிவைக்க, அகவ ணக்கத்துடன் நிகழ்வு ஆரம்ப மானது. மங்கல விளக்கினை கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி இராசநாயகம், பொருண்மிய மதியுரையக இயக்குனர்கெங்கா தரன், கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன், கரைச்சி பிரதேசசபை செயலர் திருமதி அன்னலிங்கம், உதவிக்கிட்டப் பணிப்பாளர் மோகனபவான் ஆகி யோர் ஏற்றி வைத்தனர். பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி அமலராசா தமிழ்ச்செல்வி தலை மையில் சூழல் விழிப்புணர்வு சம்பந்தமான கருத்துரைகள் நடை பெற்றன. நிகழ்வில் வரவேற்புரை யினை பொருண்மிய மதியுரையக இயக்குனர் கெங்காதரன் நிகழ்த் தினார். மேலும் கிளிநொச்சி மாவட் டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி,பளை பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலை ஆசிரியர் கள் மாணவர்கள் கலந்துகொண் டார்கள். கருத்தரங்கின் இறுதியில் பாடசாலைகளுக்கும், மாணவர்க ளுக்கும் பயன்தரும் மரங்கன்று கள் வழங்கப்பெற்றன. (சோ)

## மீள்குடியேற்றத்திற்கு அனுமதி கோரி

# ம. உ. ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட 400 முறைப்பாடுகளுக்கு பதிலில்லை

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்வதற்கு அனுமதி பெற்றுத் தரக்கோரி மனித உரிமை கள் ஆணைக்குழுவில் இடம்பெயர் ந்து வாழும் மக்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு இதுவரையும் தகுந்த பதில்கள் தரப்படவில்லை யென முறைப்பாட்டாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பும் தம் மீளக் குடியமர்விற்கு தடையாகவும், சட்டபூர்வமற்றதாக வும் இருந்து வரும் இவ்இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி அதனுள் உள்ள தம் சொந்த இடங்களில் குடியமர அனு மதி பெற்றுத்தரக்கோரி இடம் பெயர்ந்த மக்கள் 400 முறைப் பாடுகளை ஏற்கனவே மனித உரிமை ஆணைக்குழுவில் பதிவு செய்திருந்தனர்.

இவ்வாறு சொந்த இடங்களில் வசிக்குத் தம் அடிப்படை மனித உரிமை மீறப்படுவதாக செய் யப்பட்ட இம்முறைப்பாடுகள் தொடர் பாக மனித உரிமைகள் ஆணைக் குழு பல தடவை படைத் தளபதிக ளுடன் பேசினாலும் அது பற்றிய ஆரோக்கியமான பதில்களை இற்றைவரையும் தராததையிட்டே இவ்வாறு விசனம் தெரிவிக் கப்படுகிறது. (33)

# புலிகளுடனான போரை உடன் ஆரம்பிக்க பௌத்த மகாசபை கோரிக்கை

புலிகளுடனான போரை மீண்டும் ஆரம்பிக்குமாறு பௌத்த மகாசபை சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமைச்சுகளைப் மீளப் பெற்ற துடன் நாடாளுமன்றத்தைத் தற்கா லிகமாக முடக்கிய சனாதிபதியின் நடவடிக்கைகளையும் இச்சபை ஆராய்ந்துள்ளது. நாட்டில் எழுந் துள்ள அரசியல் ஆபத்தைத் தடுப்ப தற்குப் புலிகளுடன்மீண்டும் போரை ஆரம்பிக்குமாறு பௌத்த மகாசபை அவசர அழைப்பு விடுத்துள்ளது. தேசிய பிக்குகள் முன்னணியில் அங்கம் வகிக்கும் ஒரு முக்கிய பிக்குகள் அமைப்பாக விளங்கும் இவ் பௌத்த மகாசபை நாட்டில் தற்போது நடை முறையிலுள்ள போர்நிறுத்தம் உட்பட சமாதான முன்னெடுப்புக்களையும் உடன டியாக ரத்துச் செய்து புலிகளை முற்றாக நசுக்கிவிடுவதற்கு சனா திபதி ஆவன செய்யவேண்டு மெனக் கேட்டுள்ளனர்.


துயர் பகிர்கின்றோம்

கணபதிப்பிள்ளை சிவலோகநாதன் (சிவம்)
(பாண்டியன்குளம் ஊரக தே. எ. பேரவையின் பொருளாளர்)

வேலு கிருஷ்ணசாமி
(சிராட்டிகுளம் ஊரக தே. எ. பேரவையின் செயலாளர்)

ஆகியோரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஊரக / கோட்ட
தே.எ. பேரவையினர்,
பாண்டியன்குளம் கோட்டம்.

(3876)


## எழுத்துமூல இறுதிப் பரீட்சை

முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் 2003ஆம் வருடம் யோகபுரம் மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட ஆறுமாதகால ஆங்கில மொழித் திறன் பயிற்சி நெறியின் இறுதி எழுத்து மூலப் பரீட்சை 2003.11.29 ஆம் திகதி காலை 9.00-12.00 மணிவரை யோகபுரம் மகாவித்தி யாலயத்தில் நடைபெறும். பயிற்சி நெறியில் பங்குகொண்டு பயிற்சி யினை முடித்துக்கொண்ட பயிற் சியாளர்கள் குறிப்பிட்ட தினத்தில் பரீட்சைக்குத் தேவையான எழுது தாள், எழுது கருவி ஆகிய பொருட் களுடன் உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி கேட்டுள்ளார். (26)

# அமெரிக்க சனாதிபதி பிரிட்டன் செல்கிறார்

# போரிற்கு எதிரான ஆர்ப்பாட்டத்திற்கு முயற்சி

## ஊடகங்களுக்கான செவ்வியில் பிளேயருக்கு புகழாரம்

**அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அடுத்த வாரம் பிரிட்டனுக்கு விஜயம் செய்யவுள்ளார். இவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**


ஈராக் நிலவரங்கள் மோசமடைந்து வரும் நிலையில் முக்கியமாக அது குறித்து விவாதிக்கவே இப்பயணம் இடம்பெறுகிறது என அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் விஜயத்தில் மகாராணி எலிசபெத்தின் லண்டன் வாசஸ்தலமான பக்கிங்ஹாம் மாளிகையில் புஷ் தங்கியிருப்பார். அத்தோடு ஈராக் போரின் போது அவர் உயிரிழந்த பிரிட்டிஷ் படையினரின் உறவினர்களையும் சந்திக்கவுள்ளார்.

இது இவ்வாறிருக்க புஷ்சின் பிரிட்டன் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், வாஷிங்டனில் சர்வதேச ஊடகங்களுக்கு சனாதிபதி புஷ் அளித்துள்ளசெவ்வியில், ஈராக்கிலுள்ள அமெரிக்கா மற்றும் உலகநாடுகளின் இராணுவ வீரர்கள் மீது கெரில்லாத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள போதிலும் அதன் நடவடிக்கைகளை அமெரிக்கா இடைநிறுத்தி பாக்தாத்திலிருந்து வெளியேறமாட்டாது. ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் முயற்சிகள் முன்னேற்றம்அடைந்து வருகின்றன என்று கூறினார்.

மேலும் புஷ் தனது பேட்டியில் தமது நெருங்கிய சகாவான பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் குறித்து பெருமையாகப்பேசினார். பிரிட்டனில் ஈராக்போர் தொடர்பான பிளேயரின் ஆதரவு பெருமளவுவீழ்ச்சியடைந்து வரும் நிலையில் அமெரிக்க சனாதிபதியின் வருகை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



தாய்லாந்து நாட்டு சட்டவிரோத மீன்பிடிப் படகொன்றை மூழ்கடிக்கும் இந்தோனேசிய கடற்படைக் கப்பல். இரண்டுநாட்களுக்கு முன்பு அங்கு ரோந்து நடவடிக்கை ஆரம்பமானது. (சம்பவத்தில் 18 தாய்லாந்து மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்)

## பதவி துறக்க முடிவு

பேரு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் தனது பதவியை விட்டு விலக முடிவு செய்துள்ளார்.

தனது பணிகளைச் செய்வதற்கு அரசாங்கம் போதியளவு நிதியை தராமையால் தான் பதவியில் இருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளார்.



முன்னாள் குடியரசுத் தலைவரின்வளாகத்தில்கைவிடப்பட்ட அமெரிக்க T-72 ரக டாங்கி மீது ஏறிவிளையாடும் ஈராக்கிய சிறுவர்கள்.

# நேபாள அரச படைகளுக்கு சீனா ஆதரவளிப்பதாக அறிவிப்பு

நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் மேற்கொள்ளும் தாக்குதலுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு சீனா ஒத்துழைப்பு வழங்கப்போவதாக அறிவித்துள்ளது. இத்தீவிரவாதிகளுக்கு எதிராக நேபாள அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு சீனா முழுமையான ஒத்துழைப்பு வழங்கப் போவதாக சீனாவிற்கான நேபாளத்தூதுவர் தெரிவித்துள்ளார். நேபாளத்தில் மன்னர் ஆட்சியை ஒழிப்பதற்காக மாவோ தீவிரவாதிகள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சதாம் மாறு வேடத்தில் நடமாடுகிறார்

ஈராக்கின் முன்னாள்சனாதிபதி சதாம் ஹுசைன் மாறுவேடத்தில் திரிகிறார் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவர் சொந்த ஊரான ரிக்றிட்ரிற்கு வந்தால் அடையாளம் தெரிந்துவிடும் என்பதால் அந்த ஊருக்கு வெளியில் மாறுவேடத்தில் வந்துபோவதாக பொலிஸ் படைத்தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார். சதாமை கடைசியாக எப்போது பார்த்தார்கள் என்ன வேடத்தில் பார்த்தார்கள் என்ன வேடத்தில்திரிகிறார் என்ற தகவல்கள் எதனையும் அவர் தெரிவிக்கவில்லை.

## 7 பொதுமக்கள் பலி

ஈராக்கில் அமெரிக்க உலங்கு வானூர்தி நடத்திய தாக்குதலில் 7 ஈராக்கிய பொது மக்கள் பலியாயினர் இச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ரிக்றிட் நகர மக்கள் மீதே அமெரிக்க உலங்கு வானூர்தி தாக்குதலை மேற்கொண்டது




அமெரிக்கப் படைகள் ஈராக்கிய பொது மக்களைப் படுகொலை செய்வதைக் கண்டித்து பாகிஸ்தான் சுனிமுஸ்லிம்கள் அமெரிக்க தேசியக் கொடியினை எரிக்கின்றனர்.

# கைதிகளுக்கிடையில் மோதல் வெனிசுவெலா சிறையில் 7பேர் பலி

வெனிசுவெலா சிறைச்சாலையில் கைதிகள் மோதிக் கொண்டதில் 7 கைதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

தென்னமெரிக்க நாடான வெனிசுவெலாவில், பொலிவர் மாகாணத்தில் விஸ்தா நகரில் உள்ள சிறைச்சாலையிலேயே கைதிகள் இரு குழுவாகப் பிரிந்து, துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்தியும் பரஸ்பரம் தாக்கிக் கொண்டனர்.

இதனையடுத்து தேசிய பாதுகாப்புப் படைவீரர்கள் சிறைச்சாலைக்கு விரைந்து வந்து குழு மோதலைத் தடுத்துள்ளனர். அதிக பாதுகாப்பும் சிறைச்சாலைக்குப் போடப்பட்டுள்ளது.

கடந்த மாதமும் இதே சிறையில் கைதிகளிடையேயான மோதலில்3 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் கடந்த செப்டெம்பர் வரையில் மட்டும் இந்தச் சிறையில் நடந்த மோதல்களில் 240 பேர் கொல்லப் பட்டுள்ளார்கள். 1300 பேர் காயமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை கூறுகின்றது.

## பணி தொடரும்

சைப்பிரசில் கடமையாற்றி வரும் ஐ. நாடுகள் அமைதிப் படையினர் மேலும் ஆறு மாத காலத்திற்கு அங்கு சேவையாற்றலாம் என கொபி அனான் கூறியுள்ளார்.அமைதிப் படையைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் 39வருடங்களாக சைப்பிரசில் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய ஆபிரிக்கக்குடியரசில் உணவுப்பஞ்சம் ஏற்படலாம்

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் கடும் உணவுப்பற்றாக்குறை ஏற்படலாம் என ஐ.நா.சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. விவசாயத்தை நம்பியிருக்கும் சனத்தொகையைக் கொண்ட இந்நாட்டில் பயிர்ச்செய்கைக்காக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள தானிய விதைகளை உண்பதற்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு ஆரம்பித்த ஆயுதப் போராட்டத்தினைத் தொடர்ந்து 15லட்சம்பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்களில் பலர் வீடு திரும்பியிருந்ததால் சுமார் 2 லட்சம்பேர்உள்நாட்டில் அகதிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் புலம்பெயர்ந்த 40ஆயிரம் பேர்வீதித்தடைகள் காரணமாக தாயகம் திரும்பாமல் உள்ளனர்.

# எல்லை கடந்த பயங்கரவாதத்தை நிறுத்துக பாகிஸ்தானிடம் இந்தியா, ரஷ்யா கோரிக்கை

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அந்நாடு முதலில் எல்லை தாண்டியபயங்கரவாதத்தையும் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிப்பதையும் நிறுத்த வேண்டுமென இந்தியாவும், ரஷ்யாவும் கூறியுள்ளன.

வாஜ்பாய் ரஷ்யாவிற்கு விஜயம்செய்ததைத் தொடர்ந்து இவ்விருநாடுகளும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலே இது குறித்து கூறப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான ஆழ்ந்த உறவு நட்பிலும் பெரிது என வாஜ்பாய் கூறியுள்ளார்.

மூன்று நாட்கள் விஜயத்தினை மேற்கொண்டு ரஷ்யாவிற்கு விஜயம் செய்துள்ள வாஜ்பாய் மொஸ்கோவில் நடைபெற்ற இந்திய சமூகத்தினருடனான விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ரஷ்யாவுடன் இந்தியா கொண்டுள்ள இந்த முக்கியமான உறவு உலகின் நிலையான தன்மைக்கு முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.



30 வருடங்களுக்கு முன்பு தலைகுனிவுக்குள்ளாக்கப்பட்ட வியட்நாம் போரில் ஈடுபடுத்தப்பட்ட அமெரிக்க விரைவுப் போர்க்கப்பல் முன்னாள் சைகோன் என அழைக்கப்படும் ஹோ-சிமின் துறைமுகத்தை விட்டுப் புறப்படுகிறது.

# வடமாநிலங்களின் தேர்தல்

## சோனியா காந்திக்கு பலப்பரீட்சை



எதிர்வரும் டிசம்பர் மாதம் இந்திய மாநிலங்கள் ஐந்தில் சட்ட சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலில் வெற்றி ஈட்டு வதற்கான ஆயுதங் களை பா. ஜனதா கட்சியும், காங்கிரஸ் கட்சியும் வெகு வேகமாக முடுக்கி விட்டுள்ளன.

டில்லி, சத்திஸ்கார், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், முசோரம் ஆகிய வட மாநிலங் களிலேயே எதிர் வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த வடமாநிலங்கள் தான் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்த லின் வெற்றியையும் நிர்ணயிக்கப் போகின்றது என்பதில் சந்தேக மில்லை.

வடமாநிலங்களில் பெறும் வெற்றியின் அறிகுறிகள் அப்படியே அடுத்தாண்டு பெப்ரவரி காலப் பகுதியில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் பாராளுமன்றத் தேர்தலில் பங்கு வகிக்கும். அது வும் பெருவாரியான பங்களிப்பை புரியும் என்பதில் எதுவித மாற்று கருத்துக்களும் இதுவரை நிலவ வில்லை.

அதனால்த்தான் இந்த 5 மாநி லங்களிலும் காங்கிரஸ் ஆட்சியை தகர்ப்பதன் மூலம் தமது பலத்தை வலுவாக்க பாரதிய ஜனதா கட்சி வெகு முனைப்பாக பல அதிரடி நடவடிக்கைகளிலும் இறங்கி யுள்ளது.

மறுபுறம் காங்கிரஸ் கட்சி தமது ஆட்சியை தக்கவைத்துக் கொள் வதற்காக மிகுந்த பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வட மாநிலங்கள் பறிபோகுமானால், எதிர் கால பிரதமர் ஆசையையும் சோனியாகாந்தி கைவிடவேண்டிய இக்கட்டான சட்டசபைத் தேர்தல் இது.

அதனால்த்தான் சோனியா காந்தியின் தலைமைக்கு சோத னையாக இந்த சட்டசபைத் தேர்தல் அமையும் என்பதுடன், வெற்றி தோல்வி அவரது தலைமைக்கே குறிவைக்கும் என்றும் நம்பப் படுகின்றது.

அதேவேளை வடமாநிலங்களை தக்க வைத்துக் கொள்வதன் மூலமே புதிய கூட்டணிக்கு தன் வசப்படுத்தக்கூடிய கட்சிகளை இழுத்துக் கொள்ள இந்த வட மாநிலங்களே கொக்கியும் ஆகும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னரான ஆட்சிக் காலத்தில் நேரு, இந்திராகாந்தி, ராஜிவ்காந்தி என காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக மிக நீண்ட காலம் ஜொலித்தது.

ராஜிவ் காந்தி கொலையானவுடன் இந்தியாவின் ஆட்சித் தலைவர் எனும் நிலைக்கு தகுதியுடையவராக வாஜ்பாய் மாறி னார்.

இதனாலத்தான் 1998இல் சோனியா காந்தி காங்கிரஸ் தலைவி யாக பதவிஏற்றவுடன், அடுத்து வந்த தேர்த லில் மிகப்பழுத்த அர சியல் வாதியான வாஜ் பாயுடன் மோத வேண் டிய நிலைக்குத் தள்ளப் பட்டி ருந்தார். தோல்வி தான் என்றாலும் இன்று வரை கட்சித் தலை மையை விட்டுக் கொடுக்காமல் இருப்பது அவரது பொறுமையை காட்டுவதாக நம்பப்படுகின்றது.

அது மட்டுமன்றி ஆரம்பத்தில் இத்தாலி நாட்டவர் என்பதை அவரது நடை, உடை, பாவனை உணர்த் தியது என்று கூறும் காங்கிரஸ் தொண்டர்கள் இன்றைய சோனியா தோற்றத்திலும், உடையிலும், இந்தி உச்சரிப்பிலும் வாஜ்பாயை மிஞ்சி விட்டதாக விமர்சிக்கின்றார்கள்.




எனவே, சோதனைகளை, சவால் களாக எதிர்கொண் டுள்ள... எதிர் வரும் வடமாநிலங்களை தக்க வைத்துக் கொள்வாரா... என்பது நிச்சயம் எமக்கு டிசம்பர் முடிவில் அறியக் கூடிய ஒன்று.

அதேபோல் இந்தியாவில் மிகப் பெரிய கட்சியாக பாரதிய ஜனதாவும், காங்கிரஸும் தான் இருக்கின்றன. ஆனால், இவை பெரும்பான்மையுடன் இருந்த காலம் மலையேறிவிட்டது. இப்போது பெரும்பான்மை என்பது கிடையாது. இதனைச் சென்ற பொதுத் தேர்தலே இனம் காட்டி விட்டது. அதனால்த்தான் மத்தியில் கூட்டாச்சி நிலவு கின்றது.

இதுதான் பாரதிய ஜனதாவுக்கும், காங்கிரஸுக்கும் உள்ள சிக்கல் எனலாம். பெரும்பான்மை என்று மத்தியில் ஆட்சி அமைப்பது என் பது ஸ்திரமான நிலையைக் காட் டும், மத்தியில் கூட்டணி ஆட்சி என்பது ஸ்திரமற்ற நிலையையே காட்டும்.

தற்போதும் கூட்டணிகளுக்கு வலை வீசுவதில்தான் பாரதிய ஜனதாவும், காங்கிரஸும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இதனால்த்தான் சிம்லாவில் காங்கிரஸ் தலைவர்கள் கூடினார் கள். கூட்டணிக்கு பிரச்சாரம் செய் வதுபோல் மதசார்பற்ற கட்சிகளுடன் கூட்டணிக்குத் தயார் என்றார் சோனியா காந்தி.

அதேநேரம் தீவிர மதவாதக் கட்சியான விஸ்வஹிந்து பரிசட் சோனியா காந்தியை எதிர்த்து வரு வது தெரிந்தவிடயம் விஸ்வஹிந்து பரிசட்டுடன் பாரதிய ஜனதா நட்புறவை பேணுவது வெளிப்படையுண்மை.

அதேபோல் கடந்த 1999இல் பொதுத் தேர்தலில் பாரதிய ஜனதாவுடன் தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. என்பன கூட்டணி சேர்ந்த மையினால்த்தான் 40 இல் 26 ஆசனங்களைத் தமிழகத்தில் கைப் பற்றின. இந்தக் கூட்டணி 2001 சட்ட சபைத் தேர்தல் வரையும் நீடித்தது.

ஆனால், இன்றைய தமிழக நிலை வேறாகவுள்ளது. கூட்ட ணியில் அங்கம் வகித்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோ. இன்று பொடோ வழக்கில் சிறை யிலுள்ளார்.

கன்னட நடிகர் ராஜ்குமார் மீட்பில் சம்பந்தப்பட்டவர்களும் பொடோ வில்த்தான் கைது செய்யப் பட்டார்கள். தி.மு.க. தலைவர் கரு ணாநிதி ராஜ்குமார் மீட்பு சம்பந் தமாக இன்று வரையும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

எனவே இவையனைத்தும் பாரதிய ஜனதாவுக்கு சிக்கல் களைத்தான் உருவாக்கியுள்ளது. இவற்றை நிவர்த்தி செய்யாதவரை அவை கூட்டணிக்கு கைகொடுக் குமா... என்பது சந்தேகமே.

அதேநேரம் தமிழகத்தில் சட்ட சபைத் தேர்தலில் அ.தி.மு.க.வின் அமோக வெற்றி துணைப் பிரதமர் அத்வானியையும், பாரதிய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு வையும் பேராசைக்கு தள்ளியது எனலாம்.

அதனால்த்தான் அ. தி.மு. கவுடன் உறவு கொண்டாட முற் பட்டனர். இன்றுவரை உறவை முறித்துக் கொள்ள விருப்பம் இல்லாதவர்கள் இவர்கள் இருவரும் தான்.

ஆனால், வாஜ்பாய் அன்று தொட்டு இன்று வரை நீண்ட மௌனம் சாதித்தார். 1999இல் வாஜ்பாய் பதவி கவிழ்ப்பிற்கு ஜெயலலிதாவின் காங்கிரஸ் கூட்டே காரணம் என்பதுகூட அதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

தற்போது தனது கூட்டணிகளை கவர்வதில் அவர் தீவிரமாக ஈடுபட்டார் எனலாம். அதனால்த்தான் பொடோ மறு ஆய்வு குழுவிற்கு அதிக அதிகாரங்களை வழங்கினார்.

இதன் மூலம் இழந்து விடுவோமோ என்னும் தி.மு.க., ம.தி.மு.க கூட்டணியை தக்க வைத் துக் கொள்ள முனைகின்றார்.

ஆனால், கடந்த மாதம் விழுப்புரம் தி.மு.க. மாநாட்டில் மத்தியரசை பொடோ சட்டத்தில் நம்பிக்கெட்டோம். இனியும் நம்புவது அழகல்ல என்றும், உத்தரப் பிரதே சத்தில் மாயாவதி மீது தாஜ்வளாக கட்டிடம் தொடர்பாக விசாரணைகள் தொடர்கின்றது. ஆனால் ஜெயல லிதா மீதான டான்சி வழக்கு மட்டும் அமுங்கிக் கிடக்கின்றது. என தி.மு.க ஆத்திரம் வெளியிட்டுள்ளது.

இது புதிய பாரதிய ஜன தாவுடனான தி.மு.கவின் உறவைக் காட்டவில்லை.

அதுமட்டுமன்றி டிசம்பர் மாதம் முதலாம் திகதி தி.மு.க பொடோ சட்டத்தினை தமிழக அரசு தவறா கப் பயன்படுத்துவதால், மத்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென சிறை நிரப்புப் போராட்டம் நடத்த

**அ.கலைவாணி**

வுள்ளது. இதற்குக் காங்கிரஸ் ஆத ரவு வழங்கியதுடன் கலந்து கொள் வதாகவும் கூறுகின்றது.

காங்கிரஸ் அமைச்சரான மணிசங்கர் ஐயர் ஜெயலலிதாவின் தொண்டர்களால் தாக்கப்பட்ட தையடுத்து பிளவுபட்டிருந்த காங் கிரஸ் உட்கட்சிப் பூசல் கூடக் காணாமல் போயுள்ளது.

மணிசங்கர் ஐயரின் தாக்குதலை அடுத்து மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறினார். தஞ்சை மாவட்ட தி.மு.க. வினர் மாயவரம் ஓடி வந்தனர், தி.மு.க.அமைச்சரான நாஜிம் உத விகள் செய்தார்; என மணிசங்கர் ஐயர் தி.மு.க.வின் பெருமை கூறு கின்றார்.

அதுமட்டுமன்றி தி.மு.க.தலைவர் கருணாநிதியுடனும் உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டுள்ளார். அதுமட்டுமன்றி சிறை நிரப்புப் போராட்டத்திற்கு முன்னர் காங்கிரஸ் பிரமுகர்களான அல்போன்ஸ், கோபண்ணா இருவரது புத்தகங் களையும் வெளியிட்டு வைப்பது வேறு யாருமல்ல கருணாநிதிதான்.

இவையனைத்தும் ஓரளவு எதிர் கால 2004 கூட்டணியை எமக்குக் காட்டுகின்றது.



தமிழக முதலமைச்சரின் பேச்சுக் களுக்கு பதிலடி கொடுப்பதற்காக தமிழகக் காங்கிரஸ் பொறுப்பாளராக அம்பிகா சோனியை களமிறக் கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் என்னை வெளி நாட்டுக்காரர் என்று விமர்சிப்பவர்கள் அனை வருமே பதவிக்காக அலை பவர்கள்தான்; ஊழலில் திளைத் தவர்கள் தான் என்று சோனியா கூறிவருவது பாரதிய ஜனதாவுக்கு மட்டுமல்ல, சரத்பவார், ஜெயலலிதா போன் றோருக்கும் தான் என்று சுட்டப்படுகின்றது. அதே போல் தமிழகத்தில் ஜெயலலிதாவுக்கு எதிரான பிரசாரத்தில் அம்பிகா சோனி கள மிறக்கப்படலாம், என்றும் கூறப்படுகின்றது.

அதே நேரம் உத்தரப் பிரதேசத்தில் சமாஜ்வாதி கட்சியின் முலாயம்சிங்யாதேவ் ஆட்சியமைக்க காங்கி ரஸின் ஆதரவும் காரண மாகும். அதனால் உத்தரப் பிர தேசம் இதுவரை மாயாவதி முதலமைச்சராக இருக்கும் போது கிடைத்த ஆதரவு பாரதிய ஜனதா வுக்கு இனிக் கிடைக்குமா.... என்பது சந்தேகமே.

இதனால்த்தான் விஸ்வஹிந்து பரிசட் கோயில் கட்ட வேண்டுமென உத்தரப் பிரதேசத்தில் படை யெடுத்த போது மத்தியரசு பார்த்துக் கொண்டிருந்தது.

முலாயம் சிங் அரசு இருக்கும் போது ராமர் கோயில் கட்டினால் பெருவெற்றி. அல்லது கோயில் கட்டமுற்படுகையில் முஸ்லிம் இந்து கலவரம் மூண்டால்அதை வைத்து முலா யம்சிங் அரசை கலைத்து விடலாம் என நினைத்திருக்கக் கூடும்.

ஏனெனில் 1989 இல் உத்தரப் பிரதேச முதல மைச்சராக முலா யம்சிங் இருந்த போது, விஸ் வஹிந்துபரிசட் ஒரு போராட் டத்தை நடத் தியது அப்போது "பாபர் மசூதியின் மேல் அரசு அனுமதியின்றி ஒரு பறவை கூட சிறகை விரிக்க முடியாது" என எச்சரித்தார்.


கருணாநிதி...

இதனையும் மீறி விஸ்வஹிந்து பரிசட் தொண்டர்கள் ஊருக்குள் புகுந்த போது பொலிஸ் துப்பாக்கிச் சூடு நடத்தியது. பல உயிர்கள் பலியாகின. இதனைத்தான். இம் முறையும் பாரதிய ஜனதா எதிர் பார்த்தது.

ஆனால் பாரதிய ஜனதா நினைத்த எதுவுமே நடக்கவில்லை. முலாயம் எல்லா பிரச்சினைகளை யும் மிக இலகுவாக சரி பண்ணி விட்டது பாரதிய ஜனதாவை கவலைக்குள் ஆழ்த்தியுள்ளது.

அதே நேரம் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா மாயா வதி ஆட்சி நடத்தியபோது கூட உத்தரப்பிரதேசத்தில்தலித்மக்களை கவர்ந்துள்ளார். அது மட்டுமன்றி மாநிலங்கள் தோறும் தனது அம்மா வெற்றி பெற வேண்டும், மத்தியில் காங்கிரஸ் ஆட்சியமைக்க வேண் டுமென தீவிர பிரச்சாரத்தில் ஈடுப டுவதாக கூறப்படுகின்றது.

அதே உத்தரப் பிரதேசத்தில் பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி தனது ஆட்சி பறிக் கப்பட்ட பின்னர் பாரதிய ஜனதா கட்சி என்பதே இந்தியாவில் இருக் கக் கூடாது அதற்கு பாடுபடப் போவதாக சபதம் செய்கின்றார்.

இதுவும் பாரதிய ஜனதாவுக்கான வெளியில் இருந்து ஆதரவு குறை வடையும் நடவடிக்கை ஆகும்.

அதைவிடவும் மாயாவதி காங்கிரஸ் உடன் இணைந்தாலும் ஆச்சரி யப்படமுடியாது.

தற்போது தமிழகத்தில் பத்தி கையாசிரியர்களுக்கான 15 நாள் சிறைத்தண்டனை எனும் ஜெயல லிதாவின் கட்டளைக்கு எதிராக எதிர்க் கட்சிகள் அனைத்துமே ஒன்று சேர்ந்து மாநில ஆட்சியை கலைக்குமாறு போர்க்கொடி தூக்கி யுள்ளன.

காங்கிரஸ், தி.மு.க, பா.ம.க, இந் திய கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத் தைகள் என்பன தமிழக முதல மைச்சர் விடயத்தில் ஒன்றிணைந் துள்ளன.

இந்தக் கூட்டு 2004 தேர்தலிலும் நீடிக்குமா.....

தற்போது பாரதிய ஜனதா கூட்டணி சோனியா காந்தியை முடக்கும் நடவடிக்கைகளில் தான் இறங்கியுள்ளது. அந்த வகையில் சமதா கட்சித் தலைவர் ஜோஜ் பெர் ணாண்டாஸ் தீவிரமாக பாடுபட்டு வருகின்றார்.

முதல் நடவடிக்கையாக சமதா கட்சி ஐக்கிய ஜனதா தளத்துடன் இணைந்து கொண்டது.

அடுத்து பா.ஜ.கட்சி அல்லாத காங்கிரஸ் அல்லாத இடது முன் னணி சாராத முன்னாள் சோஷ லிஸ்டுகளையும் சோனியாவை எதிர்ப்பவர்களையும் ஓர் அணியில் திரட்டி பாரதிய ஜனதாவுடன் கூட்ட ணிக்கு தயார்படுத்துவது.

எனவே வடமாநில தேர்தல்கள் என்பது சமாதான தேர்தல் அன்று தலைமையை வகிக்கும் சோனியா காந்தியை பரீட்சிக்கும். பலப் பரீட் சையாகவே இருக்கப் போகி ன்றது.

அதே நேரம் ராஜஸ்தான் தவிர ஏனைய 4மாநிலங்களிலும் பாரதிய ஜனதாவின் கைதான் ஓங்கி இருப் பதாக அதிர்ச்சியாககூறப்படுவதால், வடமாநில தேர்தலே பாராளுமன்ற தேர்தலை நிர்ணயிக்கவுள்ள நிலை யில் அதனைக் கோட்டை விடுவது என்பது சோனியா காந்தி தலைமை பதவியை தனது மகளிடம் ஒப்ப டைப்பதற்கு நிகரானது.

ஏனெனில் சோனியா வெளி நாட்டவர் என்பது காங்கிரஸுக்கு வலுக்குறைக்கும் செயற்பாடாகும் ஆனால் ராஜீவ் காந்தியின் மகள், இந்திரா காந்தியின் பேத்தி, நேரு வின் கொள்ளுப் பேத்தி என்பன பிரியங்காவுக்கான புள்ளிகளை அதி கரிக்கும் செயற்பாடுகள் ஆகும்.

எனவே வடமாநிலத் தேர்தலே சோனியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகின்றது என்றால் மிகையில்லை.

# பாராளுமன்ற இடை நிறுத்தம் எதிர்கால அரசியலில் பாரிய மாற்றங்களை தோற்றுவிப்பதாக அமைகிறது!

## ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

**ஜே.வி.பி.யினரின் வரலாற்றை நோக்குமிடத்து அவர்கள் பாராளுமன்றத்தை மூடிவிடுமாறு கூச்சலிடுவது ஆச்சரியமளிக்காவிட்டாலும் பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ.முன்னணி தற்போது பாராளுமன்றத்தை இடை நிறுத்தியிருப்பது எதிர்கால அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி சனநாயகத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக ஐ.தே.க. தெரிவித்துள்ளது.**

ஐ.தே.க.வின் ஊடகப் பேச்சாளரான கயாந்த கருணா திலக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

டில்வின் சில்வா, விமல் வீரவன்ச ஆகியோர் இணைந்த கிளர்ச்சிக் குழுக்களின் வலையில் விழுந்துள்ள பொ.ஐ.மு. பாராளுமன்றை இடைநிறுத்தியிருக்கின்றது. சனநாயக வழியில் செயற்படும் நாடுகள் நிர்வாகம் செய்வது மக்களின் விருப்பத்துக்காகவே. அதற்காக அவர்கள் மக்களின் கருத்தைப் பெற்றே பாராளுமன்றம் சென்றிருக்கிறார்கள். மக்களின் கருத்தைக் கண்டறிய வேண்டியது பாராளுமன்றத்தினூடாகவே பாராளுமன்றை இடைநிறுத்தாது நடத்துவது சனநாயகம்.

வாக்குகோருவோருக்கு மரண தண்டனை விதித்து வாக்களிப் போரை வாக்களிப்பு நிலையங்களில் கொன்று இறந்தவர்களின் உடல்களைத் தோளில் சுமக்கவிடாது முழங்காலுக்குக் கீழாக தூக்கிச் செல்ல உத்தரவிடும் ஹிட்லர் வாத- கிளர்ச்சி வாத ஜே.வி.பி. பாராளுமன்றை தடை செய்து மீண்டும் மக்களுக்கு துன்ப துயரங்களைப் பெற்றுக் கொடுக்கவே முயல்கிறது.

இதனை பொதுமக்களுக்கும் பொது சன ஐக்கிய முன்னணிக்கும் எச்சரிக்கையுடன் அறிவிக்கின்றோம். இரண்டு வருட காலத்துள் நாட்டின் பொருளாதாரம், அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு, உரமானியம் என் பனபோன்ற நிவாரணங்களை அளித்து நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த முயலும் வேளையில் இவ்வாறானதொரு தடை தோன்றியிருப்பதைச் சுட்டிக்காட்டுவதுடன் இவர்களுக்குத் துணைபோக வேண்டாம் எனவும் அவர்களை வெற்றிபெற மக்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு கயாந்த கருணாதிலக கூறியுள்ளார்.

## பனம் விதை நடுகை

மன்னார் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஏற்பாட்டில் தமிழீழ தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு பாப்பா மோட்டையில் பத்தாயிரம் பனம் விதை நடுகை விழா கடந்த 12ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது. (லோ)

# கிராமிய கமக்கார அமைப்புக்கள் சந்திப்பு

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள கிராமிய கமக்கார அமைப்புக் களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் புளியம்பொக்கணை கமநல கேந்திர நிலைய வளாகத்தில் இயங்கும் பிரதேச த.பொ.மே. நிறுவன மண்டபத்தில் பிரதேச இணைப்பாளர் காசிநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது கமக்கார அமைப்புப் பிரதிநிதிகளின் கருத்துக்களுக்கு அமைவாக கிராமங்களில் செய்ய வேண்டிய அவசர வேலைத்திட்டங்கள், விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டு பின்வரும் விடயங்களை மக்களுடன் இணைந்து செயற்படுத்து வதென முடிவு எடுக்கப்பட்டது.

கால்நடை கட்டுப்படுத்தல், விவசாயிகளுக்கான கடன் வசதி செய்து விவசாய உள்ளீடு வழங்கல், இனங்காணப்பட்ட கிராமங்களில் பனம் விதைகள் தோப்பாக நாட்டுதல், மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்கும் வீதிகள் புனரமைப்புச் செய்தல், மாவீரர் வாரத்தில் சிரமதானம் செய்தல் ஆகிய விடயங்களை உடனடியாக கமக்கார அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் மக்களை இணைத்துச் செய்ய முடிவு எடுக்கப்பட்டது. (14)

## -அம்பன் சிகிச்சை நிலையம், நூலகம்-

# மீள் ஒப்படைப்பு நடவடிக்கை இராணுவத்தால் ஒத்திவைப்பு!

படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அம்பன் மத்திய மகப்பேற்றுச் சிகிச்சை நிலையம் மற்றும் பொது நூலகம் என்பனவற்றை விடுவிக்கும் நடவடிக்கையைப் படைத்தரப்பு ஒத்தி வைத்துள்ளது.

பருத்தித்துறைப்பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுநூலகம் மற்றும் மகப்பேற்றுச்சிகிச்சை நிலையக் கட்டடம் என்பவற்றை படைத்தரப்பு கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக ஆக்கிரமித்து முகாமிட்டுள்ளது.

பலதரப்பாலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகளையடுத்துஇக்கட்டடத் தொகுதிகளை நேற்று முன்தினம் உரிய அதி காரிகளிடம் மீண்டும் கையளிக்கவுள்ளதாகப் படைத்தரப்பு அறிவித்திருந்தது. இவ்வறிப்பின் பேரில் பருத்தித்துறை பிரதேச சபை அதிகாரிகள் மற்றும்சுகாதார சேவைகள் பிரிவு அதிகாரிகள் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

நீண்டநேரமாகத் தாமதிக்கப்பட்ட இவர்கள் பின்னர் கட்டடத்தொகுதிகளைக் கையளிப்பது தொடர்பான அறிவிப்பு பின்னர் அறிவிக்கப்படும் என படைத்தரப்பால் தெரிவிக்கப்பட்டதையடுத்து வெறுமனே திரும்பினர். இதனிடையே இப்பகுதியில் நிலைகொண்டுள்ள படைப் பிரிவின் அதிகாரிகள் நேற்று பலாலிக்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (27)

# நிரந்தரக் காணி அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பகுதியில் வருடாந்த காணி அனுமதிப்பத்திரம் உள்ள காணி உரிமையாளர்களுக்கு காணி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (எல்.டி.ஓ. பொமிற்) நிரந்தரக் காணி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் முன் நடவடிக்கையாக நேற்று முன்தினம் கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள காணி உரிமையாளர்களுக்கு மேற்படி திட்டத்தின் கீழ் நிரந்தர அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றன.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து கிளி. கரைச்சி காணி உத்தியோகஸ்தர் செ. சிறீரங்கநாதனினால் கிருஸ்ணபுரத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட காணி உரிமையாளர்களுக்கு நிரந்தரக் காணி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன.

கிருஸ்ணபுரம் கிராம சேவை அலுவலர் க. வைரவநாதன் கிராம மக்களின் காணிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கையினை நெறிப்படுத்தினார். (சோ)

# இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்தும் கோரிக்கை படையினரால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி-கச்சாய் வீதியின் உதய சூரியன் கிராமத்தில் மக்களை மீள் குடியமர்த்த விடுக்கப்பட்ட கோரிக்கையினை படைத்தரப்பு நிராகரித்துள்ளது. அத்துடன் உயர்பாதுகாப்பு வலயப்பகுதியினுள் மக்களை மீள் குடியமர்த்துவது அரசியலுடன் தொடர்புபட்ட பிரச்சினை எனவும் அறிவித்துள்ளது.

குறித்த உதய சூரியன் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களைமீள் குடியமர்த்துவது தொடர்பாக இடம் பெற்ற பேச்சுக்களின் போதே தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீவாசனுக்கு இம் முடிவை படைத்தரப்பு வெளியிட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டின் முற்பகுதிகளில் சாவகச்சேரி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இடம் பெற்ற போர் அனர்த்தங்களையடுத்து, உதய சூரியன் கிராமத்திலுள்ள சாவகச்சேரி நகரசபை தொழிலாளர்களது விடுதிகள் உட்பட சுமார் அறுபதிற்கும் அதிகமான குடியிருப்புக்களைப் படைத்தரப்பு ஆக்கிரமித்துள்ளது.

இந்நிலையில் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் ஆக்கிரமிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயமெனப் பிரகடனப் படுத்தப்பட்ட அப் பகுதிக்கு வெளியே உள்ள தாழ்வான நிலப் பகுதிகளில் குடிசைகளை அமைத்துக் குடியமர்ந்துள்ளனர் எனினும் வெள்ளப் பாதிப்பிற்குள்ளாகியுள்ள இம் மக்கள் தமது குடியிருப்புக்களை விடுவிக்கக்கோரி அண்மையில் மறியல்ப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதையடுத்தே குறித்த விடயம் தொடர்பாகப் பேச்சுக்களை நடாத்த கடந்த 13ஆம் திகதி தமது முகாமிற்கு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் சாவகச்சேரி நகராட்சி மன்றச் செயலாளர் மு.செ. சரவணபவ மற்றும் கச்சாய் புனித லீகோரியார் தேவாலயப் பங்குத் தந்தை இ.ரவிச்சந்திரன் வருமாறு அழைப்பு விடுத்திருந்தது. (27)

# பொதுசன நூலகங்களுக்கு புதிய புத்தகங்கள் விநியோகம்

(அலுவலக செய்தியாளர்)

பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டத்தின் கீழ் கரைச்சிப் பிரதேச சபையினரால், பொதுசன நூலகத்திற்கென புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பெற்று விநியோகிக்கப்பெற்றுள்ளன.

கரைச்சிப் பிரதேச சபையினரால் நிர்வகிக்கப்பெற்றுவரும் கிளிநொச்சி, வட்டக்கச்சி, முரசுமோட்டை பொது நூலகம் மற்றும் அக்கராயன் கிளை நூலகம் ஆகியவற்றிற்கென கரைச்சிப் பிரதேச சபையினரால் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் (2.70000) ரூபா பெறுமதியான நூல்கள் கொள் முதல் செய்யப்பெற்று நான்கு நூலகங்களுக்கும் விநியோகிக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# தென்னிலங்கை அதிகாரப் போட்டிகளால் சமாதானத் திட்டத்திற்கு ஆபத்து

## தேசிய சமாதானப் பேரவை

(கொழும்பு)

நடந்து கொண்டிருக்கும் சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான அதிகாரப் பிரச்சினையினால் சமாதானத்திட்டத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தேசிய சமாதானப் பேரவை கூறியுள்ளது.

யார் அதிகாரத்தில் உள்ளது என்ற நிலை தெரியாததால் நோர்வே அரசாங்கம் தன்னுடைய செயற்பாட்டை இடைநிறுத்த வேண்டியுள்ளது.

நோர்வே பிரதிநிதிகள் அவர்களுடைய தீர்மானத்தை மாற்றியமைத்து தாங்கள் மீண்டும் ஈடுபடுவதற்கான நிலையை சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் உருவாக்க வேண்டுமென தேசிய சமாதானப் பேரவை கேட்டுள்ளது.

# புனரமைக்கப்பட்ட தபாலகங்கள் திறந்து வைக்க ஏற்பாடு

யாழ்ப்பாண குடாநாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 3தபாலகங்கள் டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி திறந்து வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ்ப்பாண பிரதம தபாலகம், சாவகச்சேரி தபாலகம், காரைநகர் தபாலகம் ஆகியவை புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண தபாலகம் 5கோடி 65லட்சம் ரூபா செலவிலும், சாவகச்சேரி தபாலகம் 65 லட்சம் ரூபா செலவிலும் காரைநகர் தபால் நிலையம் 5அரை லட்சம் ரூபா செலவிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

# குடாநாட்டில் படையினர் ஒத்துழைப்பின்மையால் பெருமளவு வெடிபொருட்கள் அகற்ற முடியாதுள்ளது

## மிதிவெடி செயற்பாட்டுக் குழு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே 11லட்சத்து 79 ஆயிரத்து 953சதுர மீற்றர் நிலப் பரப்பு மிதிவெடி அபாயமுள்ள நிலப் பரப்பாக இனம் காணப்பட்டுள்ள போதும் இதில் தற்பொழுது 2லட்சத்து 6ஆயிரத்து 168சதுரமீற்றர் நிலப்பரப்பு மட்டுமே மிதிவெடி அபாய மற்ற பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது. என மிதிவெடிகள் செயற்பாட்டுக் குழுவின் யாழ் மாவட்ட அலுவலகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஏனைய 9லட்சத்து 73ஆயிரத்து 785சதுர மீற்றர் நிலப்பரப்பில் இருந்தும் இம்மிதி வெடிகளை அகற்றுவதற்கு படைத்தரப்பினர் ஒத்துழைப்பு இன்மையும், அவர்களால் மிதிவெடி புதைப்பு சம்பந்தமாகத் தரப்பட்ட விளக்க வரைபடங்களின் தெளிவற்ற தன்மையும் பெரும் இடையூறாக இருப்பதாக மேலும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. (33)

# கட்டாக்காலி மாடுகளை பிடிக்க நடவடிக்கை

முள்ளியவளைப் பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகள் அதிகரித்ததையடுத்து கடந்த 20ஆம் திகதி தொடக்கம் மாடு வளர்ப்போர் தமது மாடுகளை மாலை 6.00 மணி தொடக்கம் காலை 6.00மணி வரை கட்டிப் பராமரித்து வருமாறு முள்ளியவளை கமநல அபிவிருத்தி சேவையினரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முள்ளியவளைபிரதேசத்தினரும்இணைந்து அறிவிப்புக்களை மேற்கொண்டதையடுத்தும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை குறையாததையடுத்து 10ஆம் திகதி தொடக்கம் கட்டாக்காலியாக கருதப்படும் மாடுகளைப் பிடிப்பதற்கு மேற்படி இருபகுதியினரும் இணைந்து முடிவு எடுத்துள்ளனர். இதன் முடிவின் பிரகாரம் கட்டாக் காலி மாடுகள் பிடிக்கப்பட்டு உரிமையாளர்களிடம் வழங்கும் போது அதற்கான தண்டப்பணம் அறவிடுவதுடன் நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கண்டாவளைக் கோட்டத்தில் மாணவர்கள் கௌரவிப்பு

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு கண்டாவளைக் கோட்டப் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் கண்டாவளைப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலர் பி.கா. மத்தியாஸ் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், கண்டாவளை அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர், பணியாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம சேவையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொடர்ந்து பிரதேச செயலர் தலைமை உரையாற்றினார். தொடர்ந்து பலர் கருத்துரைகள் ஆற்றினர். இறுதியாக வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. (14)

# யாழ்ப்பாணப் பாடசாலைகளில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்குக் கூட ஆசிரியர்கள் தட்டுப்பாடு நிலவி வருவதாக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் அரச செயலகத்தில் நடைபெற்ற கல்வி தொடர்பான கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆசிரியர் தொழிலுக்கு வந்துள்ள பட்டதாரிகள் தம்மால் தமிழ் மொழியை கற்பிக்க முடியாது எனக் கூறி வருகின்றனர். இத் தகையநிலைகாரணமாக பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் பணிகள் பாதிப்படைகின்ற நிலையே காணப்படுகின்றது என்றார்.

# விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் பத்துக் கோடி ரூபா மோசடி தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபர்களைத் தொடர்ந்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கண்டி நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதான கணக்காய்வாளர் ஆனந்த வீரசிங்க, முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆனந்த முனசிங்க, ஆசிரிய ஆலோசகர்களான என்.எஸ். வாஜ்சாவுல்ல கே.அபேரட்ணபண்டா, சிந்துகுமாரப்பிலே எச்.எம். குணதிலக, ஏ.ரத்னாயக்க, முன்னாள் கல்விப் பணிப்பாளர் என்.ஆர்.சி. குணவர்த்தன ஆகிய எட்டுப் பேருக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# பணி நிலை வேண்டுகை

கிளிநொச்சி நகரத்தில் இயங்கி வரும் பிரபல்யமான கட்டடப் பொருள் வாணிப நிலையமொன்றிற்கு கீழ்வரும் தகுதியுடையவர்கள், ஆர்வமுடையவர்கள் தன் வரலாறு அடங்கிய சுய விபரங்களுடனும், அதற்கான தகைமைச் சான்றிதழ்களுடனும் 20-11-2003 அன்று காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

*பணி நிலைகள் :* 01) முகாமையாளர்
02) களஞ்சியக் காப்பாளர் கொள்வனவாளர்
03) விற்பனையாளர்
04) கணக்குப் பதிவாளர்

*நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:*
மருதம் வாணிபம், நடுவப் பணிமனை, கிளிநொச்சி.

குறிப்பு: ஆண், பெண் இருபாலாரும் நேர்முகத் தேர்விற்கு வருகை தரலாம்.

ஆளுகை,
மருதம் வாணிபம்.

(8905)



# தமிழீழ வைப்பகம்
# பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணி நிலை:-** உத்தியோக உதவியாளர் தரம் :- 03

**தகைமைகள:** க.பொ.த. (சாதாரண தர) தேர்வில் கணிதம் (கணிதம்42/கணிதம் II), தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த. (உயர் தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத் திட்டம** $\frac{3,670 - 5,070}{70 \times 20}$ +4,000 (7,670-9,070)

**அகவை எல்லை** – 19 – 25

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் 'ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை' எனக் குறிப்பிடப்பட்டு 2003-12-15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலாளர்,
ஆளுகைப் பகுதி,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

குறிப்பு : நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத் தபாலில் (மேலாளர், ஆளுகைப் பகுதி, நடுவப் பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ். சாலை கரடிப் போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி-8904)


# துணுக்காய் கல்வி வலயத்தில் சரீர சுகப்பயிற்சிப் போட்டி

(மல்லாவி)

துனுக்காய் வலய பாடசாலைகளுக்கிடையிலான சரீர சுகப் பயிற்சி போட்டிகள் கடந்த 8ஆம திகதி மு/யோகபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வ.சந்திரபாலன் தலைமையில் நடைபெற்ற போட்டியில் கீழ்ப்பிரிவில் 1ஆம் இடத்திதை மு/யோகபுரம் மகா வித்தியாலயமும், 2ஆம் இடத்தை மு/அனிச்சியன்குளம் அ.த.க பாடசாலையும், 3ஆம் இடத்தை மு.துனுக்காய் அ.த.க பாடசாலையும் பெற்றன.

மேற்பிரிவில் 1ஆம் இடத்தை மு/அனிச்சியன்குளம் அ.த்.க பாடசாலையும்,2ஆம் இடத்தை துனுக்காய்அ.த.க பாடசாலையும் 3ஆம் இடத்தை மு/யோகபுரம் ம/வித்தியாலயமும் ஐயன்குள அ.த.க பாடசாலையும் பெற்றுள்ளது. அடுத்த வருடம் சகல பாடசாலைகளிலும் தினமும் காலை நிகழ்ச்சியாக சரீர சுகப் பயிற்சிகள் நடைபெறும் இதனால் பிள்ளைகளின் உடற்சுகத்திற்கு வழி ஏற்படும் என வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்தா. (24)

# தமிழரின் போர்க்கால வாழ்வு; நோர்வே பல்கலை மாணவி ஆய்வு

தமிழரின் போர்க்கால வாழ்வு பற்றி நோர்வேப் பல்கலைக்கழக மாணவி ஒருத்தி யாழ் நகரில் ஆய்வு நடத்தி வருகிறார்.

நோர்வேப் பல்கலைக் கழக மாணவியான பீடா அமீன் என்பவர் குடா நாட்டு சமூகப் பாதுகாப்பும் வளப்புனர் நிர்மாணமும் எனும் தலைப்பில் ஆய்வொன்றை யாழ் நகரில் நடாத்தி வருகிறார்.

இவரின் ஆய்வுக்கு யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர்களான வி.பி.சிவநாதன் கலாநிதி சூசை ஆனந்தன் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

பீடா அமீன் நோர்வேப் பல்கலைக் கழகத்தில் பயில்கிற போதிலும் பலஸ்தீனத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு. கும்புறுமூலை கிராம மக்கள் படையினரால் தொடர்ந்து அச்சுறுத்தல்!

## கொள்ளைச் சம்பவங்களும் அம்பலம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கும்புறுமூலை கிராமத்தில் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் அண்மையில் இறந்ததினால் அக்கிராம மக்களை இராணுவத்தினர் தாக்கினர்.

இறந்தவர் உட்பட இராணுவ குழுவொன்று அண்மையில் நடந்த பல கொள்ளைச் சம்பவங்களில் தொடர்புடையவர்களென தெரிவிக்கப்படுகிறது. கடந்த சனி இரவு கொள்ளையில் ஈடுபட்ட குழு கிராமத்தவர்களால் தாக்கப்பட்டு கடுமையாகக் காயமடைந்த நிலையில் தப்பியோடியுள்ளனர்.

அடுத்த நாள் காலை இராணுவ சிப்பாய் அருகிலுள்ள காட்டில் இறந்து கிடந்ததைக் கண்ட மக்கள் இராணுவத்தினரிடம் கூறிய போது இறந்தவர் இராணுவம் இல்லை என மறுத்தனர்மக்கள் அவரை அடக்கம் செய்தனர். பின்னர் பொலிசார் சடலத்தை எடுத்து வாழைச்சேனை வைத்தியசாலையில்ஒப்படைத்தனர். அங்கு அவர் 27 வயதுடைய விமலரட்ண எனவும் கும்புறுமூலை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் எனவும் அடையாளம் காணபட்டது. பின் பெற்றோரிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தினர் இரவு வேளையில் கிராமத்தவர்களைத் தாக்கினர். இதனால் அச்சமடைந்தகிராமத்தைச் சேர்ந்த 100ற்கு மேற்பட்டோர் இரவில் பாதுகாப்பான இடங்களைத் தேடிச செல்கின்றனர் தங்களுடைய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இருப்பதாக மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.


விற்பனைக்கு

# விற்பனைக்கு
12 KVA GENERATOR

மிக நல்ல நிலையில் உள்ள ஆரஞ்சு நிற ஒரிஜினல் **AIRMAN** சத்தம் அற்ற மின் பிறப்பாக்கி ஒன்று யாழ். நகரில் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு:
0777-760680/011-2365938.

(3871)



## சிந்தனைக்கு

உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறி பிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 16-11-2003

# கடிவாளம் இன்றி....!

இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணையாளராக செயற்பட்டு வந்த நோர்வே அரசு தற்காலிகமாக அனுசரணையாளர் என்ற நிலையில் இருந்து விலகியிருக்கத் தீர்மானித்துள்ளமை ஒரு வகையில் அதிர்ச்சிக்குரிய முடிவே. ஆயினும் சிறிலங்காவின் இன்றைய அரசியல் யதார்த்தம்இதனை தவிர்க்கமுடியாததாக்கியுள்ளது என்றே கூறலாம். அதாவது சமாதான முயற்சிகள் அடைந்துள்ள நெருக்கடிகள் எந்தளவிற்கு தீவிரமானவை என்பது இதன் மூலம் அனைவரும் புரிந்து கொள்ளமுடியும்.

தற்போதைய நெருக்கடியானது ஆட்சியாளர்களுக்கு அதாவது சனாதிபதிக்கும்-பிரதமருக்கும் இடையிலான அதிகாரப் போட்டியா? அன்றி சமாதான முயற்சிக்கு ஆதரவா-எதிரான சக்திகளுக்கு இடையிலான போட்டியா?இதில் எதுவாக இருப்பினும் இவை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்படமுடியாதவையாக உள்ளன. அவற்றின் தீவிரம் உச்ச நிலையில் இருப்பதே நோர்வே அனுசரணையாளர்கள் விலகிக் கொள்வதற்கான காரணமாகும்.

மூன்று அமைச்சுப் பதவிகளையும் சனாதிபதி சந்திரிகா பறித்ததன் மூலம் அதிகாரப் போட்டியை ஆரம்பித்து வைத்தார் எனலாம். இவ் அமைச்சுக்கள் பறிப்பானது சமாதான முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கை அல்ல எனச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிக் கொள்கின்ற போதும் சமாதான முயற்சிகள் தொடரவேண்டுமானால் இவ்அமைச்சுக்கள் குறிப்பாக பாதுகாப்பு அமைச்சு அரசாங்கத்திடம் இருத்தல் அவசியம் என்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடானது பொதுவில் அரசியல் வட்டாரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகவே உள்ளது. அதாவது சமாதான முயற்சிகள் தொடரப்பட வேண்டுமானால் ஆயுதப்படையினரின் கட்டுப்பாடு அரசாங்கத்தின் கைகளில் இருத்தல் வேண்டும் என்பதே ஆகும்.ஏனெனில் இனப்பிரச்சினைத் தீர்வுகாண சமாதான முயற்சிகள் யுத்த நிறுத்த உடன்பாட்டையே அடிப்படையாகக் கொண்டதாகவுள்ளது.

இந்த நிலையில் யுத்த நிறுத்தம் எந்தளவிற்கு உறுதியாகப் பேணப்படுகின்றதோ அந்தளவிற்கே சமாதான முயற்சிகள் என்பவை முன்னேற்றம் காணக்கூடிய சூழ்நிலையே காணப்படுகிறது. ஆகையினால் பாதுகாப்பு அமைச்சு சனாதிபதியிடம் இருக்கையில் சமாதானப் பேச்சுக்களை பிரதமர் நடத்துவதென்பது கடிவாளத்தை சனாதிபதி சந்திரிகாவிடம் கொடுத்துவிட்டு வண்டியைப் பிரதமர் ஓட்டு வது போன்றதாகும். இது சாத்தியப்பாடான தொன்றாக இருக்கப்போவதில்லை.

இத்தகையதொரு நிலையில்தான் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேத் தரப்பு சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுப்பது தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்துள்ள நிலையில், தமது பணியில் இருந்து விலகிக்கொள்ள வேண்டிவந்துள்ளது. சனாதிபதி மூன்று அமைச்சுப்பதவிகளைப் பறித்த பின்னர் இலங்கை வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் மூன்று தடவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், இரு தடவை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், ஒருதடவை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனையும் சந்தித்தபின்னர் இத்தகையதொரு முடிவிற்குவர வேண்டியதாகியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், சனாதிபதிக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாட்டிற்கு-அதாவது அதிகாரப் போட்டிக்கு முடிவு எதுவும் எட்டப்படாத நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது சாத்தியமில்லை என்ற நிலைப்பாட்டிலேயே நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் சமாதான ஏற்பாட்டாளர்கள் பணியில் இருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது.

சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதாகத் தெரிவித்துள்ள போதும், நோர்வே இத்தகையதொரு நிலைப்பாட்டிற்கு வந்தமைக்கு சமாதான முயற்சிகளைமுன்னெடுத்த ரணில் அரசாங்கத்தை ஓரம் தள்ளி சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது சாத்தியமில்லை என்ற சிந்தனையோ அன்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மீது நம்பிக்கைகொண்டு செயற்பட முடியாது என்ற முடிவோ காரணமாக இருந்திருக்கலாம்.

ஆனால் நோர்வே அரசின் இம் முடிவானது சமாதான முயற்சியில் மட்டும் தாக்கத்தை விளைவிப்பதாக இருக்குமா? அன்றி யுத்த நிறுத்தம் தொடர்பான விடயத்திலும் தாக்கத்தை விளைவிக்குமா? என்பது இன்று பரவலாக எழுப்பப்படும் கேள்வி ஒன்றாகும்.

ஏற்கனவே சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவைப் பலவீனப்படுத்தியுள்ளது. இதனால் கண்காணிப்புக்குழுவினர் செயற்பாடுகள் இன்று எத்தகையதாக உள்ளது என்பதும் கேள்விக்குரிய தொன்றாகவே உள்ளது. இந்நிலையில் நோர்வேயின் வெளியேற்றமானது சமாதான முயற்சிகளை மட்டுமல்ல, யுத்த நிறுத்த உடன்பாட்டையும் பலவீனமாக்கியுள்ளது என்றே கூறலாம். இந்த வகையில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் பெரும் முயற்சியுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளினால் இன்று குழப்பத்திற்குள்ளாகியுள்ளது எனின் மிகையாகாது.

# கையேற்றுள்ள அமைச்சுக்களை மீளளித்து பிரதமரின் நடவடிக்கைகளுக்கு உதவுக

## அனைத்து பல்கலை. விரிவுரையாளர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சனாதிபதி கையேற்றுள்ள மூன்று அமைச்சுக்களையும் மீளளித்து நாட்டையும் மக்களையும் கட்டியெழுப்பும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் பிரகாசமான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடாமல் அவருக்கு உதவவேண்டும் என நாட்டின் அனைத்து பல்கழைக் கழக விரிவுரையாளர் சங்கம் சனாதிபதியிடம் கேட்டுள்ளன.

இது தொடர்பான பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் சங்கத் தலைவர் கலாநிதி சிறில், செயலர் சொய்சா ஆகியோரின் கையெழுத்துடன் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட் டிருப்பதாவது;

நிறைவேற்று அதிகாரம் என்ற போர்வையால் சனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் கைபற்றியிருப்பது எமது கவனத்திலுள்ளது.இது சட்டரீதியாக மட்டுமன்றி சந்தர்ப்ப ரீதியாகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.இதற்கான சூழலும் தேவையும் இவ்வாறிருந்த நிலையை நாம் அறிவோம்.

2002ஆம் ஆண்டைப் போலவே 2003ஆம் ஆண்டிலும் ஐ.தே.கவிற்கு பெரும் ஆதரவு கிடைக்கும் இதற்கு எதிராக சனாதிபதி நாட்டுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் வந்து விட்டது எனக் கூறிக்கொண்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தேவையற்றதொன்றாகும்.

அவரின் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு பொருளாதாரம் என்பன படுகுழியில் தள்ளப்பட்டதுடன் பொது மக்கள் மீது யுத்தம் திணிக்கப்பட்டிருந்தது. அவற்றை எல்லாம் மாற்றி நாட்டை நல்ல நிலைக்கு இட்டுச் செல்லும் ரணிலின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடும் சனாதிபதியின் நடவடிக்கை பெரும் தடையாகும். இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

# அரசாங்கத்தின் வெளியேற்ற நடவழக்கை மலையகத் தமிழருக்கு விடுக்கப்படும் சவால்

## -இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி கண்டனம்

(கொழும்பு)

தோட்டங்களில் தொழில் புரியாத தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து வெளியேற்றுவதற்கு இன்றைய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையானது தன்மானமுள்ள ஒவ்வொரு மலையகத் தமிழ் மகனுக்கும் விடுக்கப்பட்டிருக்கும் சவாலாகும் என்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உப தலைவர் கணபதி கனகராஜ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டங்களின் உரிமை காலத்துக்குக் காலம் மாறினாலும் சுமார் 200வருட காலமாக தோட்டக் குடியிருப்புக்களில் வாழ்ந்து வரும் தொழிலாளருக்கே நிலமும் குடியிருப்பும் சொந்தமானதாகும்

தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலின் போது தோட்டக் குடியிருப்புக்களும் அவற்றை சூழவுள்ள காணிகளும் தோட்டத் தொழிலாளர்களுக்கே சொந்தம் என உறுதியளித்திருந்தார்.இவ் உறுதி இன்று கேள்விக் குறியாகியுள்ளது.

இந்நிலையில் 200வருடங்களாக வாழ்ந்த குடியிருப்புக்களிலிருந்து மலையகத் தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கு இன்றைய ஐ.தே.முன்னணி அரசாங்கம் முறப்படுவதை தன்மானமுள்ள ஏந்தவொரு மலையகத் தமிழனும் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.க ஆட்சியில் நாடு பயங்கரமான நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது

## ஜே.வி.பி. செயலர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஐ.தே.கட்சி ஆட்சி செய்யும் ஒவ்வொரு மணித்தியாலமும் நாடு பயங்கர நிலைக்குத் தள்ளப்படுகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் கார்த்திகை நினைவு தினம கடந்த வியாழன் அன்று சுகததாச உள்ளரங்கில் நடைபெற்ற போது பிரதான உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது நாட்டை விற்று அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கும் தேசத் துரோகிகளை தோற்கடிப்பதற்கும் நாம் போராடுவோம்.

எமது நாடு இன்று அடிமைத் தனத்துக்குள் தள்ளப்பட்டு கொண்டிருக்கிறது.இந்நிலையை மாற்றி மக்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக் கொடுப்பது எமது முன்னுள்ள பாரிய பொறுப்பாகும்.நாங்கள் கடந்து வந்த பாதை மிகவும் கரடுமுரடானது.பல்வேறு தடைகளை நாம் எதிர் கொண்டோம். மக்களை அழித்து விடலாம் அவர்களின் கருத்துக்களை அழித்து விடமுடியாது. இதைத்தான் எமது தலைவர் ரோஹண விஜேவீரவும் அடிக்கடி வலியுறுத்தி வந்தார்.

இன்று இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு சனாதிபதி மட்டும் காரணமல்ல. பல ஆண்டுகளாக நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் மேற்கொண்ட தூரநோக்கற்ற செயற்பாடும் காரணமாகும்.

2001ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சி அமைத்ததில் இருந்து வடகிழக்கில் தனியான நாடமைக்கும் திட்டம் வேகமானது.

புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால திட்ட வரைபிற்கு உத்தியோக பூர்வமற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஐ.தே.கட்சி கொண்டு வந்த அரசியல் அமைப்பாலேயே இன்று ஐ.தே. கட்சி ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது..அரசியல் நெருக்கடியை ஏற்படுத்திய இந்த அரசியலமைப்பை மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய விதத்திலும் மாற்றலாம்.

ஜோர்ஜ் புஷ்சுடன் கைலாகு கொடுத்தவுடன் நாட்டை ஆட்சி செய்ய முடியாது. நாம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பாரிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றார்.

# தோட்டங்களில் தொழில் புரியாதவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு முயற்சி

## அரசுக்கு எதிராக மக்கள் போர்க் கொடி

தோட்டங்களில் தொழில் புரியாதவர்களை தோட்டங்களில் இருந்து வெளியேற்ற மேற்கொண்டுள்ள நடவடிக்கை அரசிற்கு எதிரான பயங்கர வாத இயக்கம் ஒன்று உருவாகும் நிலையைஏற்படுத்தலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டங்களில் தொழில் செய்வதில்லை என்பதனை சுட்டிக்காட்டி தொழிலாளர்களில் ஒரு பகுதியினரை தோட்டங்களை விட்டு வெளியேற்ற மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை தோட்டத் தொழிலாளருக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கெல்லாம் சிகரம் வைப்பது போல் அமையப் போகிறது.

இந் நடவடிக்கையினால் தோட்டங்களில் தொழில் புரிவோரை அண்டி வாழும் முதியவர்கள், இளவயதினர் மற்றும் ஆசிரியர்கள் போன்ற அரச ஊழியர்கள் படித்து விட்டு வேறு தொழில்களில் ஈடுபட்டோர் பாதிக்கப்படவுள்ளனர். இதேவேளை தோட்டங்களில் தொழில் புரியாத குடும்பங்களைத தோட்டங்களை விட்டு வெளியேற்றுவதானது மனிதநீதியையும் வீடமைப்பு சட்டத்தினையும் மீறும் செயலாகும் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ். அருள் சாமி சம்பந்தப்பட்டவர் களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன் இந்திய வம்சாவளி மக்களை வீதிக்கு கொண்டு வரும் இச்செயல்களை உடனடியாகக் கைவிடவேண்டும். இல்லையெனில் தொடர்ச்சியான போராட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

# சிறிலங்கா- இங்கிலாந்து அணிகளுக்கிடையில் 1-வது ஒருநாள் போட்டி 18ல் ஆரம்பம்

சிறிலங்காவிற்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி ரங்கிரி தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் அரங்கில் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பகல்-இரவு ஆட்டமாக இப்போட்டி நடைபெறவுள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது., பகல் இரவு போட்டியை நடத்தும் வசதியைக் கொண்ட இரண்டாவது அரங்கு இது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறப்பு அகதி முகாமில் உள்ளோரை தண்டிக்கும் வகையில் செயற்படுதல் கூடாது

## தமிழக அரசிற்கு சென்னை உயர் நீதிமன்றம் அறிவுறுத்து

(சென்னை)

தமிழகத்தில் சிறப்பு அகதிகள் முகாம்களிலுள்ள அகதிகள் விடயத்தில் அவர்களை சீர்திருத்தும் நோக்கில் தமிழக அரசு செயற்படவேண்டுமே ஒழிய அவர்களைத் தண்டிக்கும் நோக்கோடு செயற்படக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

பிறேமாவதி மற்றும் செங்கல்பட்டு முகாமிலிருந்து 10 பேர் செய்த மனுக்களை விசாரித்த இரண்டு நீதிபதிகளைக்கொண்ட குழு இவ்வாறு கூறியுள்ளது.

இலங்கைத்தமிழ் அகதிகளில் வெளிநாட்டவர் சட்டங்களின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் அல்லது சட்டத்தை மீறியவர்கள் மற்றும் பல்வேறு குற்றங்களைப்புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆகியோர் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளார்கள். இம்மாதிரி சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் தாங்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று மனுதாரர்கள் கேட்டிருந்தனர்.

தங்களை சிறப்பு முகாம்களில் வைத்திருப்பது தடுப்பு முகாம்களைப் போன்றது என்றும் தங்கள் தரப்பின் நியாயத்தை விளக்கிக்கூறவாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றும் அவர்கள் கூறியிருந்தார்கள். இந்த முகாம்களில் மனிதவுரிமை மீறலகளும்நடக்கின்றன. முகாம்களின் வாழ்க்கைநிலை மிக மோசமாக இருக்கின்றது என்றும் அவர்கள் தமது மனுக்களில் கூறியிருந்தார்கள் நீதிமன்றம் இந்த அகதிகளின் மனுக்களை நிராகரித்துவிட்டது. என்றாலும் இந்த முகாம்களில் வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு தீர்ப்பளித்தது. அகதிகள் மீதான வழக்குகள் ஆண்டுக்கு இரண்டு முறையாவது தனித்தனியாக மறுபரிசீலனை செய்யவேண்டும். வாரம் ஒருமுறையாவது அவர்கள் முகாமிற்கு வெளியே சென்றுவர அனுமதிவழங்க வேண்டும். ஆறுதலான முறையில் அகதிகள் தமது வெளியிலுள்ள உறவுகளைச் சந்திக்கவழிசெய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அகதிகளுக்கான மருத்துவ வசதிகளும் குழந்தைகளுக்கு கல்விவசதியும் தேவைப்பட்டால் தொழிற்கல்வியும் அளித்து அவர்களது வாழ்க்கை பாழாகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் நீதிமன்றத்தின் உத்தரவு கூறுகிறது. குற்றம் சாட்டப்பட்டவர்கள், குற்றம் சாட்டப்படாதவர்கள் என்று தமிழக அரசு அகதிகளைப் பிரித்துள்ளது சரியானதே என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் விசாரிக்கவேண்டும் என்பதற்காக விஜயராஜா குணராஜா என்பவர் கடந்த பல ஆண்டுகளாக சிறப்பு முகாமில் வைக்கப்பட்டு அவர்தம் தாயகம்வர அனுமதி மறுக்கப்பட்டுவந்தது. இவரது பெயர் சந்தேகத்திற்குரியவர் என்றோ சாட்சி என்றோ கூடப்பதிவாகவில்லை என்பதால் அவரை உடனடியாக விடுதலை செய்து அவரை இலங்கை செல்ல அனுமதிக்கப்படவேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.



துருக்கியில் நேற்று இரண்டு கார்க்குண்டுகள் வெடித்ததில் 23பேர் பலியாகினர்.200 இற்குமேற்பட்டோர் காயமடைந்தனர். இத்தாக்குதலை துருக்கிய இஸ்லாமிய தீவிரவாதிகள் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இறுதிப்போட்டிக்கு இந்திய அணி தெரிவு

ரி.வி.எஸ். கிண்ணத்துக்காக இந்தியாவில் நடைபெறும் முத்தரப்புக் கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டிக்குப் பங்குபற்ற இந்திய அணி தெரிவாகியுள்ளது.

நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற பகல்-இரவுப் போட்டியில் 145 ஓட்டங்களால் நியூசிலாந்து அணியை இந்திய அணி வெற்றிகொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 353 ஓட்டங்களைப் பெற்றது. சேவாக் 130 ஓட்டங்களையும், சச்சின் 102 ஓட்டங்களையும், ராகுல் ராவிட் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் பெற்றனர். ராவிட் இறுதிப்பந்து உட்பட 21 பந்துகளில் அரைச் சதத்தை எட்டியமை குறிப்பிடத்தக்கது.



ஷேவாக்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 47 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ஷஹீர்கான் 3 விக்கெட்டுக்களையும், அகக்கர், கும்ளே, முரளி கார்த்திக் தலா இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். நேற்றைய போட்டியின் சிறப்பாட்டக்காரராக சேவாக் தெரிவானார்.

எதிர்வரும் 18ஆம் திகதி கல்கத்தாவில் ஈடன்கார்டனில் நடைபெறும் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய-இந்திய அணிகள் மோதவுள்ளன.

### பிற்போடல்

நேற்று ஆரம்பமாகவிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற் போடப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் அறிவிக்கப்பட்டதும் கழகப்போட்டியில் கலந்துகொள்ளுமாறு கிளி. மாவட்ட விளையாட்டுப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### அனுமதி கோரல்

வடமராட்சியின் கொட்டோடைப் பகுதியில் உள்ள ராஜன் நகர்ப்பிரதேசத்து பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள தனியார் காணிகள் மற்றும் அரச காணிகளில் மீள குடியமருவதற்கு அனுமதிக்குமாறு அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பிரதேசம் படையினரின் வேலிக்கு வெளியே அனுமதித்திருப்பினும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. (33)

- வடமராட்சி வடக்குப் பகுதியில் -

# இறங்குதுறை ஆழப்படுத்தப்படாமையால் ஒருவாரமாக மீன்பிடி நிறுத்தம்

(வல்வை)

வடமராட்சி வடக்கின் கரையோரப் பகுதிகளில் உள்ள மீன்பிடி இறங்குதுறைகள் ஆழப்படுத்தப்படாத நிலையில் இப்பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீன்பிடிப்படகுகள் கடந்த ஒரு வாரகாலமாக மீன்பிடித் தொழிலுக்குச் செல்லவில்லை யென அப்பகுதி மீனவ சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில் குறித்த, மீன்பிடி இறங்குதுறைப் பகுதிகளில் அண்மையில் பெய்துவரும் மழை காரணமாக நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது. இதனால் குறித்த பகுதிகளில் உள்ள முருகைக்கற்களை அடையாளங் காணப்பட முடியாத நிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில் குறித்த முருகைக் கற்களில் தமது படகுகள் மோதிக்கொள்ளலாம் என்ற அச்சத்தால் மீனவர்களில் பெரும் பாலானோர் கடந்த ஒரு வார கால மாகத் தொழிலுக்குச் செல்லவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாதுகாப்புக் கருதி பெரும்பாலான மீனவர்கள் தமது படகுகளைக் கரையோரமாக மணற் பிட்டிகளில் நிறுத்தி வைத்துள்ளனர்.

இதனிடையே குடாநாட்டின் கடற்பரப்புக்களில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மீன்பிடி அனுமதிப்ப[illegible]ிரங்களைப் பெற்றுக்கொள் வேண்டுமென, யாழ்.மாவட் கடற்றொழில் நீரியல் வளததிணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஆண்டு முதல் முழுமையாக இந்நடைமுறை கடைப்பிடிக்கப்படுமென திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஜோசப் தெரிவித்தார்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் இந்நடைமுறை அமுலில் இருந்தபோதும் குடாநாட்டில் அது நடைமுறையில் இருக்கவில்லை.

எனினும் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் கடற்றொழில் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட வலைகளைக் கொண்டே மீன்பிடியில் ஈடுபடமுடியும்.

ஆனால் இலங்கை அரசினால் ஏற்கனவே தடைசெய்யப்பட்ட பலவலை இனங்கள் குடாநாட்டுக் கடலில் மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் குறிப்பிட்ட காலத்தில் கடலில் வாழ்கின்ற மீன் வகைகள் சில அழிந்துபோய் வருகின்றன. இவற்றை மட்டுப்படுத்தவே உரிய மீன்பிடி அனுமதிப்பத்திர நடைமுறை அமுலுக்குக் கொண்டு வரப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# அதிபரும், ஆசிரியரும் தாக்கியதாக ம.உ.ஆ.குழுவிடம் மாணவன் முறையீடு

அச்சுவேலி மத்தியகல்லூரி மாணவன் ஒருவர் தன்னை கல்லூரி அதிபரும், ஆசிரியரும் கொடூரமான முறையில் தாக்கித் துன்புறுத்தியதாக இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

தி. லோகநாதன் (வயது-17) என்ற மாணவன் செய்துள்ள முறைப்பாட்டில், கடந்த 12ஆம் திகதி வழமைபோல பாடசாலையில் காலைப் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை தான் சிறு தவறு ஒன்று இழைத்ததற்காக அந்தக் காலைப் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுமார் 500இற்கு மேற்பட்ட மாணவர்கள் முன்னிலையில் வைத்துத் தன்னை அவமானப்படுத்தும் விதமாக மூர்க்கத்தனமாக ஆசிரியர் ஒருவர் தன்னைத் தாக்கி துன்புறுத்தியதாகவும் இது தொடர்பாக அந்தப் பாடசாலை அதிபரிடம் முறையிடச் சென்ற தன்னை அதிபரும் அலுவலகத்தில் வைத்து தாக்கித் துன்புறுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. (உயர்தரம்) படித்து வரும் தனக்கு இதனால் அவமானம் ஏற்பட்டிருப்பதாகவும், தான் இதனால் கல்வியைத் தொடர முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் அவர் முறைப்பாட்டில் கூறியுள்ளார். (33)

### தேசிய...

அமைத்து இதனூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண முன்வர வேண்டும். அத்துடன் சிறுபான்மைக் கட்சிகளும் இந்தத் தேசிய நல்லிணக்க அரசில் இணைந்து இனப் பிரச்சினையைத்தீர்க்க முன்வர வேண்டும் என்றும் சனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (32)

# மனிதவள அலுவலர்கள் காரியாலயங்கள் திறப்பு

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக மனிதவள அலுவலர்கள் காரியாலயங்கள் கிராமங்கள்தோறும் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தில் முள்ளியவளை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையாகவும், முள்ளியவளை 2ஆம் வட்டாரத்தில் முள்ளியவளை பொதுச் சந்தைக்குக் பின்புறமும்,முள்ளியவளை 1ஆம் வட்டாரத்தில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு அண்மையாகவும், முள்ளியவளை 4ஆம் வட்டாரத்திலும், தண்ணீரூற்று நீராவிப்பிட்டியிலும், மாமூலை பூதன் வயல் கிராமத்திலும், குமாரபுரத்திலும், குமுழமுனையிலும் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் மனிதவள அலுவலர்களுக்கான காரியாலயங்கள் கடந்த வெள்ளிக் கிழமை ஒரேநாளில் ஒரேநேரத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. (ஆ)

### சமாதான...

அமெரிக்கா சிறிலங்காவுக்கு சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கும். சிறிலங்காவின் சமாதான முயற்சிகளில் அமெரிக்காவிற்கு இருக்கும் நம்பிக்கை இன்னமும் அற்றுப் போகவில்லை.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்குத் தடையாக இருக்கும் நிலைமை ஒன்று உருவாகியுள்ளது என்று மத்தியஸ்த நாடான நோர்வே தெரிவித்துள்ளது. இந்த நிலைமை குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### சனாதிபதி...

டது.பிரதமரின் வேண்டுகோள் குறித்து கருத்து வெளியிட்ட மல்வத்த பீடாதிபதி, இது குறித்து சனாதிபதியிடம் வலியுறுத்தப்போவதாகத் தெரிவித்தார். சனாதிபதியின் 'நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக நீக்காவிட்டாலும் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் அதில் திருத்தங்களைக் கொண்டுவர தாம் முயற்சிக்கப் போவதாக மகாநாயக்கர்கள் பிரதமருக்கு வாக்குறுதி அளித்துள்ளனர். நாட்டில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் சிறுகட்சிகளும் ஒன்று சேர்ந்தால் தற்போதைய நெருக்கடிக்குத்தீர்வு காண்பதற்கு சிரமமெதுவும் இருக்காது என்றும் தற்போதைய நெருக்கடிக்கு அரசியல்சட்டமே காரணமாகும் என மல்வத்த பீடாதிபதி கூறியுள்ளார். (32)

### புலிகளின்...

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையிலான குழுவினரும் விசேட அதிரடிப்படைத் தரப்பில் பொலிஸ் அத்தியட்சகர் உப்புள்செனவிரத்தின தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டனர்.

தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து அமுலில் இருப்பதால் அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதென்றும் நடைமுறைப்பிரச்சினைகள் தோன்றும் போது அதனை வழமைபோல் உரியதரப்பின் கவனத்திற்குக் கொண்டுவந்து பேசித்தீர்ப்பதென்றும் இச்சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டது. இது போன்ற சந்திப்பை மாதாந்தம் தொடர்ந்து நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்பு அரசாங்க படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.